635

The Registrar of Books,
Madras 6.

பதிவு எண் —M. 5720 வெள்ளிக் கிழமையில் தருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு :- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

635/2-7

கிளை—ரு | தருகுலம், மாம்பாக்கம் ; விகிருதி, பங்குனி ; 13—4—51. | தளிர்—உகூ

"குணநலம் சான்றோர் நலனே ; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று"

"கடனென்ப நல்லவை யெல்லாம் ; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

மற்றொரு புத்தாண்டு நாள் !

—பண்டித நேரு.

" இன்று புத்தாண்டு நாள் ! இந்த உலகம் சூரியனைச் சுற்றி மற்றொரு வலம் வந்தாயிற்று ; முக்கிய நாட்களையோ அல்லது விடுமுறை நாட்களையோ அது கவனிப்பதில்லை.

அதன் பரப்பில் எண்ணிறந்த புல்லிய உருவங்கள் ஊர்ந்துகொண்டிருக்கின்றன. அவை ஒன்றோடொன்று பூசலிட்டுக்கொண்டு—ஆண்களும் பெண்களுமாக—அதன் இயக்கத்தின் அச்சும் தங்களாலே தான் என்று அறியாமை காரணமான பெருமிதத்தால் மனக்கோட்டை கட்டுகின்றன.

இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல், பரந்த வெளியில், ஓய்வில்லாமல் அது கடுகிச் செல்கின்றது. தன் மக்களை அது பொருட்படுத்தவில்லை; ஆயினும், நாம் நம்மைப் பொருட்படுத்தாமலிருக்க முடியாது.

புத்தாண்டு நாள், நம்மிற் பலர் வாழ்க்கைப் பயணத்திலிருந்து சிறிது ஓய்வு கொண்டு, பின்னால் திரும்பிப் பார்த்துச், சென்றதை எண்ணிப், பின்பு முன்னோக்கி நம்பிக்கையுடன் முயற்சி செய்ய ஏதுவாகும் !"

—உலக வரலாற்றின் கண்ணோட்டம்.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 4. தனித் தாள்—அணா 1

'நற்றிணை' அழகு

(திரு. R. G. பிள்ளை B. A)

"பிறைவனப் புற்ற மாசறு திருநுதல்
நாறிருங் கதுப்பினெங் காதலி
வேறுணர்ந்து
வெரூஉ மான் பிணையின் ஓரீஇ
யாரை யோவென் றிகந்து நின்
றதுவே."

இலக்கியச் சுவை ஒன்பது வகைப் படும். அவற்றுள் நகைச் சுவை என்பதொன்று.

அச் சுவை இன்ன தன்மைய தென்று உடன்பாடாக எடுத்துக் காட்டுவதினும், ஒன்றைக் காட்டி, எதிர் மறையான் இது நகைச்சுவை யன்று எனச் சொல்வது எளிதாகும் என்கிறார் ஓர் ஆங்கிலப் புலவர்.

நகைச்சுவை 'மிகைபடு நகையது பிறர் நகை யுடையது' என்கிறார் ஒரு தமிழ்ப் புலவர்.

இவ்விரு புலவர்தங் கருத்தையும் நம் அகத்திற் கொண்டு மேற் குறித்த செய்யுளைச் சிறிது ஆராய்வோம்.

மருத நிலத்துத் தலைமகன் பரத்தையைப் பிரிந்து தலைமகளை நெருங்கினான். தலைமகள் சினந்து அவனுக்கு வாயில் மறுத்தாள்.

தெருவில் புதல்வன் சிறு தேர் (நடைவண்டி) பிடித்து நடை பயின்றிருந்தான். தன் புதல்வனை எந்திச் சென்றால் அவனிடத்திலுள்ள அன்பு மிகுதியால் தன் போற்றா வொழுக்கத்தைத் தலைமகள் மறந்து தனக்கு வாயில் நேர்வாளெனத் தலைவன் கருதினான்.

நடைபயிலும் புதல்வனைத் தூக்கித் தன் மார்பகத் தணைத்துக் கொண்டு தலைவன் தலைவியை நெருங்கினான். குழந்தையின் வாய்நீர் தலைமகன் மார்பிற் பூசியிருந்த சந்தனத்தைக் கரைத்தது.

தலைமகனை அக்கோலத்திற் கண்ட தலைமகள் பெண்மானைப் போல வெருண்டாள். துள்ளி அயலிடம் பாய்ந்தாள். மான் பிணை, அவ்வளவு தான் செய்திருக்க முடியும், ஆனால், தலைவியாகிய மானோ தன் வாய் விட்டு ஒரு சொல்லுஞ் சொல்லிற்று. தலைமகனைப் பார்த்து 'யாரையோ' என்றது.

இவ்வொரு சொல் தலைவனுக்குப் பெருநகையை விளைத்தது. அந் நகையைத் தான்மட்டும் நுகர்தலாற்றானாய் எதிர் நின்ற பாணனை நோக்கி, "ஏ பாணனே! என்னருகில் வாராய்; தலைவி என்னை இகந்து கூறியதை நாமிருவருஞ் சேர்ந்து நகைப்போம்" என்று அவனைத் தலைவன் அழைக்கின்றான். இதுதான் பின் வரும் நற்றிணைச் செய்யுளின் பொருள்.

"நகுகம் வாராய், பாண! பகுவாய்
அரிபெய் கிண்கிணி ஆர்ப்பத்
தெருவில்
தேர்நடை பயிற்றுந் தேமொழிப்
புதல்வன்
பூநாறு செவ்வாய் சிதைத்த
சாந்தமொடு
காமர் நெஞ்சந் துரப்ப யாந்தன்
முயங்கல் விருப்பொடு குறுகினே
மாகப்

புதல்வனை எந்திச் சென்ற தலைமகனைக் கண்ட தலைமகள் மானைப் போல் வெருண்டகன்றாள் என்ற தோடு செய்யுள் அமைந்திருக்குமாயின், அச் செய்யுளில் நகைச்சுவை யொன்றையும் நாம் காண முடியாது. தலைவி வாய்விட்டுச் சொன்ன 'யாரையோ' என்ற ஒரு சொல்லிலே தான் நகைச்சுவை ததும்புகிறது. 'என்னருகில் வராதே, நீபோ' என்றாளாயின் அதில் நகைச் சுவையை நாம் காண முடியுமா? முடியாது.

'யாரையோ' என்ற தலைவியின் சொல்லுக்குப் பொருளைத் தலைவன் ஆராய்கிறான். "எனக்கிவள் ஈன்றெடுத்த புதல்வனை நான் எந்திச் சென்றதைக் கண்டும் என்னை யாரென்று கேட்டனளே. இவளுடன் எனக்குற்ற தொடர்பிற்குச் சான்றல்லனோ இப்புதல்வன்?" என நினைக்க, தலைவனுக்கு நகை பொங்கியது.

தான் பெற்ற இன்பத்தைப் பாணனும் பெற வேண்டித் தலைவன் பாணனை அழைக்கின்றான்; அவ் விருவரோடும் அந்நகையை நாமுஞ் சுவைக்கின்றோம். இதைத்தான் நகைச்சுவை 'பிறர் நகையுடையது' என்றார் தமிழ்ப்புலவர்.

'யாரையோ' என்ற நகைதருஞ் சொல்லைச் சொல்லித் தலைவியுஞ் சிரித்திருப்பளாயின், அவள் ஊடல் நீடித்திராது. தலைவனும் பாணனை அழைத்திரான். செய்யுளைப் படிக்கும் நம்போன்ற பிறருக்கும் அந் நகைப் பொருள் எட்டியிராது.

ஆகவே நகைக்கேதுவாகிய சொல்லைச் சொல்லுபவர் தாம் நகைக்காமல், பிறரை நகைக்க வைப்பதே நகைச்சுவையாகும். அச்சுவைக்கு, மேற் குறித்த நற்றிணைச் செய்யுள் அரியதோர் எடுத்துக் காட்டாகும்.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

கைத்தறி ஆடைகள்
வணிகக் குறி!
—N. K. M.—
தங்க நாடா
(பதிவு)
எண் 20 முதல் 100 வரையில்
வேட்டி, சேலை, துண்டு, போர்வை,
மேலாடை முதலியவை பல வகைகளிற் கிடைக்கும்.
நூலாடைகட்கும்
பட்டாடைகட்கும்
நம்பிக்கையான இடம்:
கருப்பண முதலியார்
ஸ்டோர்ஸ்,
துணி வாணிபம்,
53, கிடங்குத் தெரு, சென்னை 1.

பெரிய புராணம்

எங்கும் பண்ணிசைக்கும் வீணைகள்; எங்கும் மாதர் பாதங்களில் அணியும் செம்பஞ்சுக் குழம்புகள்; எங்கும் வண்டுகள் மொய்க்கும் கூந்தல்; எங்கும் இசைவளர்க்கும் குழல்கள்; எங்கும் தொண்டர் இருப்பிடங்கள்; எங்கும் வேதக் குரலொலிகள்; எங்கும் குளிர்ந்த உச்சியையுடைய சோலைகள்; அவற்றில் ஆத்தி முதலிய மரங்கள்!

மாலையில் மாடுகள் வந்து தங்கும் கொட்டில்கள், வண்டுகள் தங்கும் மலர் இருக்கைகள்! இசைபாடுகின்ற அழகிய இல்லங்கள்; அம்மனை விளையாட்டுகள்! நீண்ட வெற்றிக் கொடிகள்; நிதி நிலையங்கள்! மாந்தர் தோள்களில் இதழ் விரியும் மலர் மாலைகள்! காதலர் உலாவி மகிழும் மாலை நேரங்கள்! இவைகளும் அந்த நாட்டின் சிறப்புகள்!

தெருக்களில் விழாக்களின் ஆரவாரம்; இல்லங்களில் விருந்தினர் ஆரவாரம்! ஒவ்வொரு பிரிவினரும் தமக்குரிய கடமைகளில் தப்ப மாட்டார்; மைந்தரும் மனையறத்தில் பிறழமாட்டார். பறவைகளும் விலங்குகளுங் கூட நீதிநெறிகளில் வழுவமாட்டா. கொடிய காட்டு விலங்குகளும் தம் கொடுமை தணிந்து நாட்டில் அமைதியாய்ப் பழகுதலை விரும்பும். ஓதுகின்ற எழுத்துகள் அந்த நாட்டில் திருவைந்தெழுத்தே; இவ்வாற்றால், பிணிகள் வர அஞ்சும்.

இங்ஙனம், சோழவள நாட்டின் சிறப்பு, சொல்லுக் கடங்காதது. தனது தோளாற்றலால் பகை நீக்கி எதிரின்றி ஆட்சிபுரியும் அநபாய அரசனது பொற்குடை நீழலில் குளிர்ந்திருக்கும் நாடு அது! என்றால், அதன் பெருமைக்கும் ஓர் எல்லை யுண்டோ!

திருநகரச் சிறப்பு

13

சோழ நாட்டில், செஞ்சடை இறைவன் எழுந்தருளியுள்ள திருவாரூர்த் திருநகரம் பழமையும் திருமகள் வழிபட்ட சிறப்பும் மிக்கது!

வேத ஓசையும் வீணையின் ஓசையும் தேவர்கள் செய்யும் புகழ்மொழி ஓசையும் மாதர் நடனத்தின் சதங்கை ஓசையும் முழவோசையும் இசையோசையும் அந் நகரத்தில் ஊக்கமாய்க் கிளர்ந்து கேட்பது வழக்கம்.

பற்பல வாத்தியங்களின் பரந்த ஒலியோடு, செல்வச் செழிப்பு மிக்க தெருக்களில் ஓடும் தேர்களின் மணி ஒலியும், யானை குதிரைகளின் ஒலியும் எங்கும் மிகுதியாய் எழுந்தொலிக்கும்.

மாட மாளிகைகளிலும், உப்பரிகை மண்டபம் கூடம் கோபுரம் தெரு திண்ணைகளிலும், சாளரங்கள் அமைந்த அரங்குகளிலும் ஆடல் மாதரின் அழகிய சிலம்புகள் ஆர்க்கும்.

ஆடல் மாதர், பதியிலார் வகுப்பைச் சேர்ந்தவர். அவ் வகுப்பினர் வாழும் மாளிகைகளில் ஒன்று, உமையம்மையின் தோழியாராகிய பரவை என்னும் மங்கை தோன்றிய திருமாளிகை! மேலும், திருமாலும் நான்முகனுந் தேடுதற்கரிய சிவபெருமான் வன்றொண்டருக்காகத் தூது போய் நடந்தமையால், வீதிகளில் அத் திருவடிச் சுவடு மணக்கும் பெருமையமைந்தது திருவாரூர்! அதன் பெருமை அளவுபடுமோ!

மாதர்கள் தெருவில் குங்குமக் குழம்பு தெளிப்பர்; அதனால், சேறான தெருக்களை, அம் மாதர் கூந்தலில் உள்ள மலர்களின் மகரந்தப் பொடிகள் சிந்தி உலர்த்திவிடும்.

திருவாரூர்ப் பக்கங்களில் கிளிகளும் இறைவன் திருப்பதிகம் பாடும்; நாகணவாய்ப் பறவைகள் அவற்றைக் கேட்டு ஒருமை கொள்ளும்; இந்நிலையை அறிந்து உருகாதவர் அங்கு யாருமில்லை.

கடை வீதிகளோ கடல் போலக் காட்சி யளிப்பவை; ஏனென்றால், கடலிற் காணப்படும் முத்து முதலிய மணிகளைப் போல் ஏராளமான பல்வேறு மணிக்கலன்களும், அலையோசை போன்ற பேரொலியும், வகை வகையான பண்டங்களை அவ்வப்போதும் ஆறுகள் அடித்துக் கொண்டு வந்து நிறைதலுமே அதற்குக் காரணம்.

தெருக்களில் வேத வொலிகளேயன்றிச் சங்கொலிகளும் மாறி முழங்கும்; உயரத்தில் தேவர்களின் ஒளியேயன்றித் தோரணக் கொடிகளின் ஒளிகளும் மாறி ஒளிரும்.

சடை தாங்கிய சிவயோகியர், சிவனடியார், மாதவர், முனிவர், மறையவர், ஏனை இன்பத்துறை நிற்போர் முதலிய பலரும் தங்கும் பல் வேறு சூழல்களையுடையது, அப் பழைய நகரம்.

நிலமென்னும் மடந்தையின் முகம் போன்றது தமிழகம், நெற்றி போன்றது சோழநாடு என்றால், அந் நெற்றியின் பொட்டுப் போன்றது இத் தலைநகரம் எனலாம்; திருமகளுக்கு இருக்கையாகிய தாமரை மலரைப் போல் இங்ஙனம் வளரும் சிறப்பும் தங்கும் நல்லிடமாய்த் திருவாரூர் திகழாநிற்கும்.

நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை 1.

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."
—புறநானூறு.

கிளை	விகிருதி, பங்குனி	தளிர்
3	13-4-51 வெள்ளி	26

புதிய ஆண்டு

வழக்கம்போல மற்றொரு புதிய ஆண்டு தொடங்குகின்றது! எல்லாவற்றிற்கும் பெயர் இருப்பதுபோல இதற்கும் ஒரு பெயர்!

காலத்தினால் நன்றி செய்ய வேண்டும் என்பது திருவள்ளுவர் கருத்து. காலந்தோறும் நன்மைகள் செய்துகொள்வதையல்லாமல், வேறு என்ன செய்துகொண்டு மக்கள் வாழ்வு பெற முடியும்? நன்மைகள் செய்தால், கர ஆண்டும் நன்மை பயப்பது திண்ணந்தான்!

ஆண்டுப் பிறப்பு நாள், நமது நாட்டில் ஒரு கொண்டாட்டமாகப் போற்றப்பட்டு வருகிறது; அமைதியான மகிழ்வுடன் நண்பர் உறவினருடன் ஒருங்கிருந்து, நன்றாய்ச் சிந்தித்துக் கொள்வதற்காகத்தான்! நாட்டுக்கும் தமக்கும் பயன் செய்யும் நன் முயற்சிகளையும் அவற்றிற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்வதற்குரிய சிந்தனைகள் சிந்தித்தற்குரியன.

உரிய சிந்தனையில் தலை சிறந்தது தெய்வ சிந்தனையாய் இருக்க வேண்டும் என்பது, பெரியோர் கருத்து. உணவு உடை நிழல் என வாழ்க்கைத் தேவை முதலியவற்றிற்கான சூழ் நிலைகள் அமைவதற்கும் அது வழி செய்யும் என்பது அவர் எண்ணம்; வேறு போக்குகள் மெய்ப் போக்குகள் அல்ல என்று அவர் உறுதியாய்க் கூறுகின்றனர்.

"தம்மை யேபுகழ்ந்து
இச்சை பேசினும்
சார்வினும் தொண்டர்
தருகிலாப்
பொய்ம்மை யாளரைப்
பாடாதே எந்தை
புகலூர் பாடுமின்,
புலவீர்காள்!
இம்மை யேதரும்
சோறும் கூறையும்
ஏத்த லாம்இடர்
கெடலுமாம்
அம்மை யேசிவ
லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு
இல்லையே"

என்பது நம்பியாரூரர் திருமொழி! இந்த மெய்யன்பு கர ஆண்டுப் பிறப்பு நாளில் மக்களிடம் செழித்தோங்கினால், கடந்த ஆண்டுகளிற் கண்ட தொல்லைகள் பலவற்றைக் கர ஆண்டிற் கடக்கும் ஏதுக்கள் தோன்றும்.

அருட் சிந்தனையுடன், உணவு உடைச் சிக்கல் நீக்கம் பற்றிய கலைச் சிந்தனை பொருட் சிந்தனைகளையும் அடுத்த நிலையில் சிந்திக்க வேண்டுவது நன்மக்கள் கடமை; இச் சிந்தனை அவற்றைத் திறமையுடன் கடப்பதற்கு உதவும்.

அருளின் வழி நின்று சிந்தித்தலால், அவற்றிற்குரிய சிந்தனையும் செயலும் சூழலும், இனிமையும் எளிமையும் பெரும் பயனுமாய்ச் சென்று, இடர்கள் கழிந்து நன்மையில் முடியும்.

கர ஆண்டில் சான்றாண்மைப் பண்பு மிகுந்து நாடு துயர் தீர்வதாக!

எதிர்பார்த்த நலம்!
உருவான செய்கை!
பல நூற்றாண்டுகளுக்குப் பின்
கிடைக்கப் பெறுகிறோம்!

திருப்புகழ் முதலிய
முருகவேள் அருள்நூல்கள்
தெளிவான - -
- - உரையுடன்

பன்னிரு திருமுறைகளாக,
பகுதி பகுதியாய்,
கர, சித்திரை முதல்
வெளிவருகின்றன!

உரையாசிரியர்:
தணிகை மணி
திரு. வ. சு. செ. அவர்கள்.

பன்னிரண்டாந் திருமுறை,
சேய்தொண்டர் வரலாறுகள்!
இதுகாறும் வெளிவராதது!
புதிய செய்யுட் காப்பியம்!

கிடைக்குமிடம் :-
குருகுலம்,
மதுராந்தகம் P. O.

முருகவேள் பன்னிரு திருமுறைகள்—(மாதிரிப் பக்கம்)

II. அருள் பெற

[1]உம்பர்தருத் தேநுமணிக் கசிவாகி—
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி ;

இன்பரசத் தே[2]பருகிப் பலகாலும்—
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே ;

தம்பிதனக் காகவனத் தணைவோனே—
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே ;

அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே—
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே !

III. அருள் மறவாமை

[3]பக்கரைவி சித்ரமணி பொற்[4]கலணை யிட்டநடை—
பக்ஷியெனு முக்ரதுர கமுநீபப்—

பக்குவம லர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும் ;

திக்கதும திக்கவரு குக்குடமும் ரக்ஷைதரு
சிற்றடியு முற்றியப னிருதோளும்—

[5]செய்ப்பதியும் வைத்துயர்தி ருப்புகழ்வி ருப்பமொடு
செப்பென எனக்கருள்கை மறவேனே ;

---

1. உம்பர்தரு - சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிஜாதம், கற்பகம் என்னும் ஐவகைத் தெய்வத விருக்ஷங்கள். தேநு - காமதேநு என்னும் தெய்வப் பசு. மணி - சிந்தாமணி யென்னும் தெய்வத ரத்நம். இம் மூன்றும் தம்மை யடைந்தோர்க்கு அவர்கள் விரும்பிய பொருள்களைத் தரவல்லன. 2. பருகி - பருக.

3. பக்கரை - அங்கவடி. 4. கலணை - கல்லணை ; குதிரைச் சேணம். 5. செய்ப் பதி - வயலூர்.

II

விண்ணவர் உலகிலுள்ள (கற்பக மாதிய) மரங்கள், காமதேநு, சிந்தாமணி (இவைகளைப் போல ஈதற்கு என்) உள்ளம் நெகிழ்ந்து—

ஒளி (வீசும்) கடலில் (தோன்றிய) இனிய அமுதம் (போன்ற) உணர்வு (என் உள்ளத்தே) ஊறி (அதனாற் பிறக்கும்) ;

இன்பச் சாற்றினை (நான்) உண்ணும்படி பலமுறையும்—
எனது உயிரின்மீது ஆதரவு வைத்து அருள்வாயாக ;

தம்பியின் பொருட்டுக் காட்டில் அணைந்தவனே !—
தந்தையை வலஞ் செய்ததால் கையில் அருளப் பெற்ற பழத்தை உடையவனே ! ;

அன்பர்களுக்கு வேண்டிய நிலைத்த பொருளா யுள்ளவனே!—
ஐந்து கரங்களையும் ஆனை முகத்தையும் (கொண்ட) பெருமாளே !

(ஆதரவுவைத்து அருள்வாயாக.)

III

“அங்கவடி, பேரழகான மணி, பொன் (நிறத்த) சேணம் (இவைகளைப் பூண்டு) நடக்கும் பறவையாகிய மிடுக்குள்ள குதிரையையும், கடம்ப (மரத்தின்)—

தக்க மலர் மாலையையும், அந்த மலை (கிரௌஞ்சம்) அழிந்தொழியும்படி அதன்மேற் பட்டு உருவிச் செல்லும்படி விட்டருளிய (திருக்) கரத்தில் (உள்ள) கூரியவேலையும்;

திக்குகள் மதிக்கும்படி எழுந்துள்ள சேவலையும், காத்தளிக்கும் சிறிய (திரு) அடிகளையும், திரண்டுள்ள பன்னிரண்டு தோள்களையும்—

வயலூரையும் வைத்து உயர்ந்த திருப்புகழ்ப் (பாக்களை) விருப்பமொடு சொல்லுக”—எனக் (கூறி) எனக்கு அருள் செய்ததை மறவேன் ;

சந்தேகம்

(அ. தி. வீரராகவன்)

இறந்தான் அவன், மறந்தான் இவ்வுலகை. அழுதனர் அவனுடைய நண்பர்கள். ஏன்? அந்தக் கிராமமே அந்த இளம் வாலிபனுக்காக 'மள' 'மள' வென்று கண்ணீர் விட்டது.

அவன் கடும் காய்ச்சலால் இறந்தானா? 'விடம்' கொண்டு உயிர் விட்டானா? 'அம்மை' வார்த்து அதன் துன்பம் தலைக்கேற, இவ்வுலகை விட்டு அகன்றானா? மருத்துவன் மாரி, இவ்வுலகை வெறுத்து மாண்டானா? யாராவது பகைவனால் பகைக்கப்பட்டு, அவனால் பதை பதைக்கத் தாக்குண்டு மாய்ந்து விட்டானா? பாதியில் கொள்ளை நோய் வந்து அவனை வாரிக்கொண்டு சென்று விட்டதா? இல்லை-இல்லை, இவைகள் எவைகளினாலும் அவன் இறக்க வில்லை.

அவன் இதுவரை, எவனைத் தன் உயிர் நட்பினன் என்று எண்ணிக் கொண்டிருந்தானோ, எவனைத் தன் மனம் மொழி மெய் இவை மூன்றினாலும் நம்பிக்கொண்டிருந்தானோ, எவனைத் தான், உண்மையான அன்பன்—தெய்வத் தொண்டு புரிவோன்—புனிதமானவன் என்று எண்ணி உளம் பூரித்தானோ அவனால் கொலை செய்யப்பட்டான். கொலை என்றால் 'கத்தி' கொண்டு குத்திச் செய்தது அன்று. கடும் நஞ்சு கொடுத்து அதனை அவன் அருந்தச் செய்து, அதனால் அவன் இறக்கக் காரணமா யிருந்ததும் அன்று.

'சாலுவான் குப்பம்' கிராமம், பல்லவர்கள் இந்நாட்டை ஆண்ட போது சிறப்புற்று விளங்கியிருந்த மகாபலிபுரத்திற்கு இரண்டு கல் வடக்கால் உள்ளது. 'குப்பம்' என்றதுமே, அது கடலுக்கு அருகில் இருக்கும் சிறிய கிராமம் என்று கூறி விடலாம். அவ்வூருக்கும் கடலுக்கும் இரண்டு பர்லாங்கு தூரந்தான் இருக்கும். கிராமத்திலிருந்து கடற்கரைக்குச் சென்றால் வழியிலெல்லாம் சவுக்குத் தோப்புகள் காணலாம்.

கடற்கரை ஓரத்திலே, சவுக்கு மரங்களுக்கு இடையிலே ஆங்காங்கு ஒரே கல்லில் குடையப்பட்ட குகைகள் போன்று பல இருக்கும். அவைகளுக்குள் சிலவற்றில் சித்திரங்களும் அக் கல்லிலேயே செதுக்கப்பட்டிருக்கும். இக் குகைக் கோயில்கள், பல்லவர்களுள் சிறந்து விளங்கிய நரசிம்மவர்ம பல்லவன் காலத்தில் உண்டாக்கப்பட்டவைகள்.

அக் குகைக் கோயில்களுள் ஒன்று மிகவும் சிறப்புற விளங்கியிருந்தது; மிகவும் மேம்பட்ட முறையில் கல்லினால் செதுக்கப்பட்டது அதனுள், அழகான முருகக் கடவுள் மயில்மேல் அமர்ந்திருக்குமாறு தீட்டப்பட்டிருந்தது.

பெண்களும் ஆண்களும் அங்கு நிரம்பியிருந்தனர். "சிவந்த மேனியை யுடையவனே! செவ்வாடை அணிந்தவனே! ஆறுவுருவம் தாங்கி நிற்கும் ஆறுமுகா! குறமகள் வள்ளியையும் தெய்வயானையையும் மனைவியராகக் கொண்ட வேலனே! பர்வதராஜன் புதல்வியின் புதல்வனே! பகைவரை அழிக்கும் மெய்யோனே! அருள் வேண்டி நிற்கும் அன்பர்களுக்கு, அவர்களுக்குற்ற மருள் நீக்கி ஆட்கொள்ளும் அய்யனே! வேலைக் கையிலே ஏந்தி நிற்கும் வீரனே! குறிஞ்சி நிலத்திற்குத் தலைவனே! உம்மை நாங்கள் வேண்டி நிற்கின்றோம். எங்களுக்குற்ற இடர் நீக்கி, மடமை மடித்து, நாங்கள் கடமையைக் கடைப் பிடிக்கச்செய்ய உம்மை உதவ வேண்டுகின்றோம்" என்று அவ்வூர்ப் பூசாரி 'பூவரசு' கூறி முடித்தவுடன், அங்கிருந்த ஆடவரும் பெண்டிரும் ஆண்டவனை நோக்கிக் கன்னத்தில் அறைந்துகொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றனர். எஞ்சி அங்கிருந்தவர்கள் மாரியும் பூவரசுந் தான்.

மாரியும் பூவரசும் நிறைவயதினர்; தாய் தந்தையற்றவர். இருவருக்கும் தனித்தனியாக இரண்டு காணி நிலங்கள் இருந்தன. 'மாரி' அவ்வூர் வைத்திய மரபில் உதித்தவன். பூவரசு பூசாரி மரபில் உதித்தவன். இருபதைக் கடந்த வயதினராகிய இவ்விருவரும் தம் தம் தொழில்களைச் செவ்வையுறச் செய்துகொண்டிருந்தனர். அவரவர்களுக் கேற்ற நூல்களை நன்கு பயின்றவர்கள். மாரி வீட்டிற்கு மூன்றாவது வீடு தான் பூவரசு வீடு.

'என்ன பூவரசு உன் கண்கள் குழிந்து காணப்படுகின்றன. கன்னங்கள் ஒட்டிக் கிடக்கிறது, பார்த்தால் காய்ச்சலில் படுத்துக் கிடந்தவன்போல் தோன்றுகிறதே!'

ஆம்! முறைக்காய்ச்சலால்தான் நான் அவதிப்படுகிறேன். உன்னிடம் வரவேண்டும் என்று கூட நினைத்தேன், அவ்வளவு மிகுதியாக இருந்தது காய்ச்சல் நேற்று.

என்? வாவில்லை, என்னிடம் இருக்கும் 'அன்ன பேதிச்' செந்தூரத்தை அடுத்து இரண்டு வேளை சாப்பிட்டால் எந்த முறைக் காய்ச்சலும் கிட்டே நெருங்காதே.

சரி, உன்னுடைய வீட்டுக்கே நேரே வருகிறேன்; வா போகலாம்.

இவ்வாறு இலையும் கிளையுமாக இருந்த நட்பினர்களைத்தான்—ஒரு புயற்காற்று—சந்தேகக் காற்று—பிரித்து விட்டது என்றுமே கூடாதபடி.

பூவரசை அத்தான் என்று அழைக்கும் முறையாக ஓர் அழகுள்ள ஆரணங்கு அவ்வூரில் வசித்தாள். அவளுடைய பெயர் அலமேலு. பயிர்த் தொழிலிலே சிறந்தும் பக்தித் தொழிலில் பிழைத்தும் வரும் பூவரசுக்கு, இயற்கையாகவே, அவளை மனைவியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மனதில் முளைத்து முற்றியிருந்தது.

(தொடரும்)

"முல்லை! அன்று ஒரு நாள் காலையில் குளத்துக்கு நீராடச் செல்லும் போது, வழியில் ஒரு பாறையில் பேசிக்கொண்டிருந்தோமல்லவா? அன்றைக்கு நீ ஒரு கனவு கண்டதாகச் சொன்னாயே; நினைவிருக்கிறதா? அக்கனவில் பிலவ ஆண்டுத் தமிழகத்தில் மக்கள் புகைக்குடி பயன்படுத்தவில்லையென்று சொன்னாயே. அக் கனவு பலிக்கத் தொடங்கியிருக்கிறது. சென்னை ஆட்சியினர் படக்காட்சிகளில் மக்கள் புகைக்குடி பயன்படுத்தக் கூடாதெனத் தடுக்கும் சட்டத்தை நிறைவேற்றியிருக்கின்றனர். இதை மக்கள் போற்றுவர் என்பதில் ஐயமில்லை" என்றாள்.

"ஆமாம் மல்லிகா, செய்தித்தாள் வாயிலாக நானும் அறிந்தேன். படக் காட்சிகளில் மட்டுமென்ன, எல்லாப் பொது இடங்களிலுமே இதைப் பயன்படுத்துவதைத் தவிர்த்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். ஊர்திகளில், புகை வண்டிகளில், தெருக்களில், பொதுக் கூட்டங்களில் இங்கெல்லாங்கூடப் புகைக் குடி பயன்படுத்தாமலிருந்தால் நலமாயிருக்கும்" என்று கூறினாள்.

"கட்குடி போலப் புகைக்குடியும் அவ்வளவு கெடுதி பயப்பதா?" என்று கேட்டாள் மல்லிகா.

"கட்குடி அறிவைக் கெடுக்கும். இது அறிவைக் கெடுப்பதோடு மூச்சுப்பையையும் தாக்கி, செந்நீரையும் கெடுக்கும். இக் கெட்ட பழக்கம் ஆங்கில ஆட்சியில் மிக்குப் பரவியது. அவர்கள் நாட்டில் குளிர் மிகுதி. அதனால் அவர்கள் இப் பழக்கத்தை மேற்கொண்டனர். முதன் முதலில் மகாராணி எலிசபெத் அம்மை காலத்தில் சர் வால்டர் ராலி (Sir Walter Raleigh) என்பவர் அமெரிக்காவுக்குச் சென்று அங்கிருந்து புகையிலை கொண்டு வந்தார். அதைக்கொண்டு புகைக் குடியாய்ப் பயன்படுத்திக்கொண்டிருக்கும் போது, வேலைக்காரன் பார்த்துவிட்டு அவர் மீது தீப் பிடித்துவிட்டதாக எண்ணி ஒரு இடத்தில் நீர் கொண்டு

மகளிர் உரையாடல்

(முத்துசாமி)

4

வந்து அவர் மீது கொட்டினான் என்று ஓர் கதையும் வழங்கி வருகிறது. என்றாள், முல்லைக் கொடி.

"நம் நாட்டிலேதான் வெப்பம் மிகுதியாயிற்றே. இங்கு என் பயன்படுத்துகிறார்கள்?" என்று மல்லிகா கேட்டாள்.

ஆங்கில ஆட்சிக் காலத்தில் நம் மக்கள் அவர்கள் பழக்க வழக்கங்களை மேற்கொள்வது பெருமை யென்றும் உயர்ந்த நாகரிகம் என்றும் எண்ணிப் பின்பற்றி விட்டனர். இவர்கள் குடித்து வெளி விடும் புகை காற்றில் பரவி மற்றவர்களையுங் கெடுக்கிறது. அதனாலேதான் பொதுவிடங்களில் பயன்படுத்தக் கூடாதென்று சொன்னேன். புகைக் குடிக்காக நம் நாட்டின் செல்வம் கோடிக் கணக்கில் செலவாகிறது. பெரிய பெரிய தொழிற் சாலைகள் இதற்கென்றே வேலை செய்கின்றன. கோடிக் கணக்கில் செலவு செய்து இறக்குமதி செய்கிறார்கள். இவ்விறக்குமதிக்குச் செலவு செய்யும் பணத்தை நமக்கு இன்றியமையாது வேண்டப்படும் உணவு, இயந்திரங்கள் முதலிய பொருள்களுக்குச் செலவு செய்தால் நாடு எவ்வளவோ நலமடையும். ஆனால் பழக்கம் கொடிதல்லவா? தொடக்க நிலையில் பொது விடங்களிலாவது பயன்படுத்தாதிருத்தல் நலம்" என்றாள் முல்லைக் கொடி.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

அச்செய்யுளின் சொல் நயம் பெரிதும் வியத்தற்குரியது. 'தெருவில் தேர் நடை பயிற்றுந் தேமொழிப் புதல்வன்' என்ற சொற்றொடரைப் படிக்கும்பொழுதே சொல் நயம் வெளியாகிறது. தேன்மொழி தேமொழியாயிற்று. இனிய சொல் என்பது பொருள். தளர் நடைப் பருவத்தனாய புதல்வன்றன் சொல்லிலோ அதன் பொருளிலோ இனிமை காண்டலரிது. தம் மக்கள் மழலைச் சொல்லைக் கேட்டும் பெற்றோர் தம் உள்ளத் தூறுகின்ற இனிமையைத் தான் ஆசிரியர் புதல்வன் சொல்லிற்கு அடையாக்கி அதைத் தேமொழி என்றார்.

"குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்"

என்ற திருக்குறளை உட்கோளாகவுடைய,

"எழுத்தின் உறழாது வழுக்கு பொருளின்றிக்
குறிப்பொடு படாது வெறித்த புன் சொல்லே
யாயினும் பயந்ததம் சேயவர் சொலு மொழி
குழலினும் யாழினும் அழகிதாம்"

என்ற பட்டினத்தடிகள் வாக்கு இங்கு உன்னற்பாலது.

"வேறுணர்ந்து வெரூஉ மான் பிணையின் ஒரீஇ" என்றது சொல் நயத்தைக் காட்டுவதுடன் தலைவியின் இயக்கத்தைச் சிறு சொற்களைக் கொண்டு அரிய உவமையால் விளக்கி நின்றது.

இத்தனை அழகுகளும் பொருந்திய செய்யுளை இயற்றிய மதுரை, ஓலைக் கடையத்தார் நல்வெள்ளையார் ஒரு பெண்மணி யென நாமறியும் பொழுது, பண்டைத் தமிழகத்தில் தமிழை வளர்க்கப் பெண்களும் அரும்பாடு பட்டார்களெனத் தெரிகிறது. அப் பெண்ணாசிரியரைத் தற்காலப் பெண்களும் பின்பற்றுவாராக.

15 APR 951 MADRAS

"முல்லைக் கொடி"

குருகுலத்தின் கிழமை இதழ்.

நல்ல தமிழில், புரியும் வகையில்,

உரிய விலையில்,

பலதுறைக் கருத்தில்,

சீர்திருத்த முறையில்,

சுவைப் பண்பில், பணி உருவில்

வெள்ளிக் கிழமைதோறும்

வெளிவரும்

ஒரு பெருந்தன்மையான

உணர்ச்சி வெளியீடு!

ஆண்டுக் கையொப்பம் ரூ. 4

வெளிநாட்டுக்கு ரூ. 5

குறிப்பு :—

குருகுலத்தார்க்குக் கட்டணம் இல்லை; தமிழாசிரியர்க்கும், திருவள்ளுவர் கழகங்களுக்கும் ஆண்டுக் கையொப்பம் ரூ 3 மட்டும்.

இதழ் விற்பனையாளர்

எல்லா ஊர்களிலும் தேவை;

ஆறில் ஒன்று கழிவு தரப்பெறும்.

இசைந்த முன்பணத்துடன்

தேவைக்கு எழுதுக!

விளம்பரத் திட்டம்

உள் பக்கம் :

ஒரு பத்தியில் ஓர் அங்குலம் ஒரு தடவைக்கு ரூ. $1\frac{1}{2}$. நீண்ட கால ஒப்பந்தங்களுக்கு ரூ. 1.

கு-பு.—நான்கு அங்குலத்துக்குக் குறையாத விளம்பரமும், ஓர் ஆண்டுக்குக் குறையாத ஒப்பந்தமும் முதன்மையாகக் கவனிக்கப்பெறும்.

மேல் பக்கம் :

முழுப் பக்கம்	ஒரு தடவைக்கு	ரூ. 30
அரைப் பக்கம்	,, ,,	ரூ. 16
ஒரு பத்தி	,, ,,	ரூ. 12

கு-பு.—தொடர்ந்த விளம்பரங்களுக்கு, கட்டண எளிமை கருதப்பெறும்.

குருகுலம், மாம்பாக்கம்;

(வடதிருச்சிற்றம்பலப் பெருவெளி)

மதுராந்தகம் (அஞ்.)

இது,

திருக்குறள் மறைக்குச்

செய்கை நிலையம்.

நாட்டு மக்கள், 'மொழி' 'கலை' 'தொழில்' 'அருள்' 'பணி' என்னும் ஐவகை வாழ்வியல் திறமைகளிற் சிறந்து திகழ்வதற்கு முயல்வது.

பள்ளி, கல்லூரி, கலையரங்கு, அச்சகம், நூற்பதிப்பு, இதழ்ப் பதிப்பு, படிப்பகம், தொழிலகம், அருள் நிலையம், உணவு விடுதி முதலிய பல்வகை உறுப்புகளுடன் பணி புரிவது.

வாழி, மன்பதை!

குருகுலத்தில் உணவு விடுதி

- பிள்ளைகள், பண்பிலும் திறமையிலும் இளம்பருவத்திலிருந்தே பழக்கம் பெற, குருகுல வாழ்க்கைதான் சிறந்தது!
- சுவைபொருந்திய நல்வாழ்க்கையைச் சிறு பருவத்திலேயே உருவாக்கிக்கொள்ள, எப்போதும் குருகுலச் சூழலே ஏற்றது.
- மதுராந்தகம் உயர்நிலைப்பள்ளி முதலிய அண்மையிடங்களிற் சென்று கல்வி பயில்வோர், குருகுல விடுதியில் இருக்க விரும்பினால், அவர்க்கும் இடம் அளிக்கப்பெறும்.
- உணவுத் தட்டும் விலையுயர்வும் உள்ள இக் காலத்தில் ஆண்டுக்கு ரூ. 200-க்கு மேற்படாத குறைந்த செலவிலும், விடுதியிற் கலந்துகொள்ள வாய்ப்புண்டு.
- தூய்மையிலும், பணியிலும், ஒருமையிலும் ஆர்வமுடையோர்க்குக் குருகுல இல்லத்தின் வாயில் என்றுந் திறந்திருக்கின்றது!

பதிந்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.)